தினமணி

வேளாண் இடுபொருள்கள் விநியோகம்

First Published : 17 Jun 2012 11:33:24 AM IST

உளுந்தூர்பேட்டை, ஜூன் 16: உளுந்தூர்பேட்டை ஒன்றியத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறை சார்பில் மறுபயிர் சாகுபடி சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் இடுபொருள்கள் வழங்கும் விழா உளுந்தூர்பேட்டையில் சனிக்கிழமை நடைபெற்றது. ஒன்றியக்குழு தலைவர் கே.பாலு தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கருணாநிதி வரவேற்றார். உளுந்தூர்பேட்டை ஒன்றியம் எடைக்கல், சாத்தனூர் கிராமங்களைச் சேர்ந்த 25 பயனாளிகளுக்கு உளுந்து விதைகளை வழங்கி சட்டப்பேரவை உறுப்பினர் ரா.குமரகுரு சிறப்புரையாற்றினார்.

ஒன்றியக்குழு துணைத் தலைவர் ரா.சாய்ராமன், துணை வேளாண்மை அலுவலர் தமிழரசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் தியாகராஜன், சுதர்சனம், ராஜாக்கண்ணு, கிடங்கு மேலாளர்கள் சரவணன், ஜெயராமன், அ.தி.மு.க. நகர செயலாளர் எஸ்.துரை, ஒன்றிய செயலாளர் ஆர்.பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் விவசாயக் கடனுக்கு வட்டி இல்லை!

First Published : 17 Jun 2012 12:33:19 AM IST

போபால், ஜூன் 16: மத்தியப் பிரதேச மாநிலத்தில் விவசாயிகளுக்கு மாநில அரசு வழங்கும் கடன்களுக்கு இனி வட்டி ஏதும் செலுத்தத் தேவையில்லை என்று முதலமைச்சர் சிவராஜ் சிங் செப்கான் அறிவித்தார். இந்த ஆண்டு ஏப்ரல் முதல் வழங்கப்பட்ட கடன்களுக்கும் இது பொருந்தும் என்றார்.

காங்கிரஸ் ஆண்டபோது விவசாயக் கடன்களுக்கு 12% வட்டி வசூலித்ததாகவும் அதை பாரதிய ஜனதா அரசு படிப்படியாகக் குறைத்து இப்போது 3% வட்டி வசூலிப்பதாகவும், இப்போது அதையும் ரத்து செய்ய முடிவு செய்திருப்பதாகவும் செப்கான் தெளிவுபடுத்தினார்.

விவசாயம் என்பது லாபகரமான தொழிலாக மாற வேண்டும் என்று மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்தாலும் மத்திய அரசு தன்னுடைய கொள்கைகள், நடவடிக்கைகள் மூலம் விவசாயிகளைக் கடனில் ஆழ்த்துகிறது என்று அவர் சாடினார்.

உர விலை 200% முதல் 300% வரை இந்த ஆண்டு உயர்ந்ததற்கு மத்திய அரசுதான் காரணம் என்ற செப்கான், உர விலையை சந்தை நிலவரப்படி உயர்த்த அனுமதிக்காமல், விலையை அரசே நிர்ணயிக்க வேண்டும் என்றார்.

உர விலையை மத்திய அரசு உயர்த்த அனுமதிப்பதற்குக் கண்டனம் தெரிவித்து தலைநகர் போபாலில் நடத்திய 24 மணி நேர உண்ணாவிரதத்தை அவர் சனிக்கிழமை முடித்துக்கொண்டார்.

மாநில அரசுக்கு எதிராகப் போராடும் சக்தியை பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் இழந்துவிட்டதையே சமீபத்தில் நடந்த மகேஷ்வர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் முடிவு காட்டுகிறது என்று மாநில பாஜக தலைவர் பிரபாத் ஜா சுட்டிக்காட்டினார்.

அத் தேர்தலில் பாஜக வென்றது, காங்கிரஸ் தோற்றது.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 46.88 அடி

First Published : 17 Jun 2012 12:51:12 PM IST

ஈரோடு, ஜூன் 16: பவானிசாகர் அணை நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 46.88 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 206 கன அடி நீர் வந்தது.

## கால்நடை நோய்த் தடுப்பு கருத்தரங்கம்

First Published : 17 Jun 2012 12:38:26 PM IST

உதகை, ஜூன் 16: நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடை நோய்களைத் தடுப்பது குறித்த கருத்தரங்கம் உதகையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய வளாகத்தில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் பொது மேலாளர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், கால்நடை விவசாயிகளும், பால் உற்பத்தியாளர்களும் பங்கேற்றனர்.

இதில் கால்நடை பராமரிப்பு மற்றும் நோய்கள் குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறை உதவி மருத்துவர்கள் மற்றும் ஆவின் மருத்துவர்கள் விளக்கமளித்தனர். சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்ட உதவி

திட்ட அலுவலர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, நீலகிரி மாவட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் ஆவின் ஒன்றியத்தின் வாயிலாக செயல்படுத்தப்படும் திட்டங்களைக் குறித்து விவரித்தார். கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலக சிறப்பறிஞர் லட்சுமணன், கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் டாக்டர் நாகராஜன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## 40 வனப்பறவைகள் பறிமுதல்

First Published : 18 Jun 2012 02:22:14 AM IST

புதுச்சேரி, ஜூன் 17: புதுச்சேரியில் வனத்துறையினர் மேற்கொண்ட சோதனையில், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 40-க்கும் மேற்பட்ட வனப் பறவைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை வனத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையில், விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 40 பறவைகளை பறிமுதல் செய்தனர். மேலும், பறவைக் கறியை வாங்கிய ஒருவரைப் பிடித்து ரூ.500 அபராதம் வசூலித்தனர்.

இது குறித்து துணை மண்டல வனப் பாதுகாவலர் அனில்குமார் கூறியது: ஊசிட்டேரி பகுதியில் தங்கி இனப்பெருக்கத்தில் ஈடுபட வரும் வெளிநாட்டுப் பறவைகள், நரிக்குறவர்கள் சிலரால் வேட்டையாடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அவர்களுக்கு வேறு வாழ்வாதாரம் இல்லாத நிலையில், அதைப் பயன்படுத்திக் கொண்டு சிலர், மாமிசத்துக்காக கூடுதல் பணம் கொடுத்து, வேட்டையாடச் சொல்கின்றனர். ÷அவ்வாறு வருவோர் குறித்து வனத்துறைக்குத் தகவல் தெரிவிக்குமாறு, நரிக்குறவர்களிடம் கூறப்பட்டுள்ளது. கறி வாங்க வருவோரும் கைது செய்யப்படுவர்.

மேலும், நரிக்குறவர்களுக்கு இது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி தொடங்கியிருக்கிறது. மேலும், அவர்களுக்கான மாற்றுத் தொழில்கள் குறித்தும் ஆலோசித்து வருகிறோம். அது குறித்து விரைவில் அரசுக்குப் பரிந்துரைக்க இருக்கிறோம் என்றார்.

## கொடைக்கானலில் பருவமழை தொடக்கம்

First Published : 18 Jun 2012 09:32:57 AM IST

கொடைக்கானல், ஜூன் 18: கொடைக்கானலில் பருவமழை தொடங்கியுள்ளதால், அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் குளுமையான சூழ்நிலை நிலவுகிறது.

கொடைக்கானலில் பொதுவாக ஜூன் முதல் தேதியிலிருந்து பருவ மழை பெய்யத் தொடங்கும். ஆனால் பருவ நிலை மாற்றம் காரணமாக கடந்த 13-ந் தேதி முதல் தொடர்ந்து பகல் நேரங்களில் அவ்வப்போது காற்றுடன் மழை பெய்து பெய்து வருகிறது.

கடந்த இரண்டு நாள்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகையும் கணிசமாக அதிகரித்து காணப்பட்டது. வழக்கத்திற்கு மாறாக சற்று குளுமை அதிகமாக நிலவியதால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கொடைக்கானல் படகு குழாமில் தேசிய அளவிலான படகுப் போட்டி நடைபெற்றதால், சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பு கருதி கடந்த 10 நாள்களாக படகு சவாரி செல்ல முடியாத நிலை இருந்தது. ஞாயிற்றுக்கிழமை முதல் படகு சவாரி செய்ய அனுமதிக்கப்பட்டதால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியுடன் படகு சவாரி செய்து மகிழ்ந்தனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## "கிரிஷ்மா' மாம்பழக்கூழ் ஏற்றுமதி திட்டம் முடங்கியது

ஜூன் 18,2012,00:16



கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து வெளி நாடுகளுக்கு, "கிரிஷ்மா' மாம்பழக்கூழ் ஏற்றுமதி öŒ#யும் திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால், உற்பத்தி செய்த மாங்கூழை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழி தெரியாமல், உற்பத்தி யாளர்கள் திணறி வருகின்றனர்.Œõகுபடி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 40 ஆயிரம் ஹெக்டேரில் மா சாகுபடி செய்து ஆண்டுக்கு, மூன்று லட்சம் டன் மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இங்கு அல்போன்சா, பெங்களூரா, செந்தூரா மற்றும் நீலம் உள்ளிட்ட மா ரகங்கள் வர்த்தக ரீதியாக பயிர் செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் நிலவும் வறட்சியை தாங்கக் கூடிய பெங்களூரா ரகம் மொத்த சாகுபடி பரப்பில், 60 சதவீதம் பயிரிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில், 60 மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. ஒரு தொழிற்சாலையில், ஒரு பருவத்தில் ஐந்து முதல் ஏழு ஆயிரம் டன் பழம் வரை மாங்கூழ் தயாரிக்கப்படுகிறது.

அனைத்து தொழிற்சாலைகளிலும் சேர்த்து ஒருபருவத்தில், 90 ஆயிரம் டன் பழங்களில் இருந்து, 50 ஆயிரம் டன் மாம்பழக்கூழ் தயாரிக்கப்படுகிறது.

இவற்றில், 90 சதவீதம் சவூதி அரேபியா, துபாய், ஏமன், மலேசியா, சிங்கபூர் மற்றும் கிழக்கு ஐரோப்பியா நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

இதன் மூலம் ஆண்டுக்கு, 500 கோடி ரூபாய் அன்னிய செலாவணி கிடைக்கிறது.

லாபம்:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மாங்கூழுக்கு பொதுவான பெயர் இல்லாததால், மாவட்டத்தில் உள்ள மாங்கூழ் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு கிடைக்க வேண்டிய லாபம், வெளிநாட்டு வியாபாரிகளுக்கு கிடைத்து வந்தது.

இதை தவிர்க்கும் வகையில், 2006ம் ஆண்டு மாவட்டத்தில் உள்ள அனைத்து மா விவசாயிகள் மற்றும் மாங்கூழ் தொழிற்சாலை உரிமையாளர்கள் ஒன்று கூடி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தயாரிக்கப்படும் மாங் கூழுக்கு, "கிரிஷ்மா' என்று பெயர் சூட்டி விற்பனை செய்வதென முடிவு எடுத்தனர்.

ஒத்துழைப்பு இல்லை:ஆனால், இந்த திட்டத்தை செயல்படுத்த தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் முழு ஒத்துழைப்பு அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இத்துடன், மேலும் பல்வேறு காரணங்களால், "கிரிஷ்மா மாங்கூழ் ஏற்றுமதி திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

இதனால், உற்பத்தி செய்த மாங்கூழை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வழி தெரியாமல், மா உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கொடைக்கானலில் ஆப்பிள் விளைச்சல் அதிகரிப்பு

ஜூன் 18,2012,00:52



கொடைக்கானல்:கொடைக்கானலில் ஆப்பிள் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இங்கு விளையும் பிளம்ஸ், பேரி பழங்களுக்கு அடுத்தபடியாக, ஆப்பிளுக்கு வெளிமார்க்கெட்டில் கிராக்கி உண்டு. பழ மரங்களிலேயே கூடுதல் பராமரிப்பு செலவு, நீண்ட நாட்களுக்கு பிறகு மகசூல் என்பதால் குறைந்தளவிலேயே ஆப்பிள் பயிரிடப்பட்டுள்ளது.

ஜூன், ஜூலை மாதங்கள் மட்டுமே இவற்றின் மகசூல் இருக்கும். தற்போதுள்ள குளிர் சூழல் மற்றும் பருவமழையால் ஆப்பிள் மகசூல் சிறப்பாக உள்ளது. எதிர்பார்த்த அளவிற்கு பழங்கள் விளைந்துள்ளதால், சந்தையில் நல்ல விலை கிடைக்கும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். விவசாயி ராஜேந்திரன் கூறுகையில்,"கடந்த இரண்டு ஆண்டுகளாக பூச்சி தாக்குதல், பருவ மழையின்மையால் செலவழித்த பணத்தை கூட எடுக்க முடியாமல் அவதிப்பட்டோம். தற்போது ஆரம்ப நிலையிலேயே பழங்கள் நன்கு விளைந்துள்ளன. பிளம்ஸ் பழங்களுக்கு நிகராக ஆப்பிளும் விளையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது', என்றார்.தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் கி÷ஷார் கூறுகையில்,"விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்கும் வகையில், வெளிநாட்டிலிருந்து புது ரக ஆப்பிள் நாற்றுகளை வழங்க திட்டமிட்டுள்ளோம்'என்றார்.

## ரூ.23 லட்சத்துக்கு பருத்தி, எள் விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,00:58 IST

இடைப்பாடி: கொங்கணாபுரம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 23 லட்சம் ரூபாய்க்கு, பருத்தியும், எள்ளும் விற்பனையானது.

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின்,

கொங்கணாபுரம் கிளையில், சனிக்கிழமைதோறும் பருத்தி ஏலம் நடைபெறும். அதன்படி, நேற்று முன்தினம் நடந்த பருத்தி ஏலத்தில், 1,500 பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு வந்தது. அதில், பி.டி ரக பருத்தி, 100 கிலோ மூட்டை, 3,500 முதல் 3,950 ரூபாய் வரையும், சுரபி ரக பருத்தி, மூட்டை, 3,900 முதல் 4,550 வரையும், எம்.சி.யு.5 ரக பருத்தி, மூட்டை, 3,650 முதல் 3,900 ரூபாய் வரை என, 18 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

அதேபோல், எள், 1,300 மூட்டைகள் ஏலத்துக்கு வந்தது. ஐந்து லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளை எள் கிலோ, 59 முதல் 65 ரூபாய் வரையும், கறுப்பு எள் கிலோ, 49 முதல், 56 ரூபாய் வரையும் ஏலம் போனது.

## ஆத்தூரில் நடந்த மஞ்சள் ஏலம் ரூ.30 லட்சத்துக்கு விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:39 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,300 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

ஏலத்துக்கு, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், நைனார்பாளையம், திருவண்ணாமலை, பெரம்பலூர் ஆகிய வெளி மாவட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாது, ஆத்தூர் அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளைவித்த மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வருவர்.

இங்கு நடக்கும் ஏலத்தில், தரமான மஞ்சள் கிடைப்பதால், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், சென்னை உள்ளிட்ட வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான மஞ்சள் வியாபாரிகள் கலந்து கொள்வர்.

அதன்படி, நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 3,500 ரூபாய்க்கும், அதிகபட்சம், 4,899 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 3,000 ரூபாய்க்கும், அதிகபட்சம், 4,161 ரூபாய்க்கும் விற்பனையானது.

விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 1,300 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையாது. இரு வாரங்களாக மஞ்சள் ஏலம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு, 123 ரூபாய் விலை குறைந்தும், உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, 42 ரூபாய் விலை அதிகரித்துள்ளது.

## ஆமணக்கு சாகுபடி ஒரு நாள் இலவச பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:28 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 19ம் தேதி, ஆமணக்கு சாகுபடி குறித்து, ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது' என, அதன் ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 19ம் தேதி, ஆமணக்கு சாகுபடி முறைகளும் மற்றும் உரம் இடும் தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில், ஆமணக்கு சாகுபடியின் முக்கியத்துவம், மண் பரிசோதனை செய்தல், நிலம் தயார் செய்தல், விதை நேர்த்தி, பயிர் இடைவெளி உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது. விவசாயிகள் உட்பட விருப்பம் உள்ள அனைவரும் பயிற்சி முகாமில் பங்கேற்கலாம்.

பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ள நபர்கள், வரும் 18ம் தேதிக்குள் கால்நடை மருத்துவக் கல்லாரி வளாகத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்திற்கு நேரிலோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ளவேண்டும்.

## அட்மா திட்டம் சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:28 IST

ராசிபுரம்: அட்மா திட்டம் சார்பில், 2011ம் ஆண்டுக்கான, நாமகிரிப்பேட்டை வட்டாரத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான பயிற்சி முகாம், முள்ளுக்குறிச்சியில் நடந்தது.

உதவி வேளாண் இயக்குனர் (பொறுப்பு) வசுமதி தலைமை வகித்தார். துணை அலுவலர் ராஜேஸ் வரவேற்றார். உதவி பொறியாளர் மணி பேசினார். வேளாண் பொறியியல் துறை மூலம் சாகுபடியில் இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து, சிறப்பு பயிற்சியும், செயல் விளக்கமும் செய்து காண்பிக்கப்பட்டது.

தொடர்ந்து, அருகில் உள்ள சாகுபடி நிலத்தில் களையெடுக்கும் கருவி, பிரஸ் கட்டர், குழி தோண்டும் கருவி மற்றும் பேட்டரி ஸ்டிரேயர் ஆகியவை பயன்படுத்துவது குறித்து இயக்கிக் காண்பிக்கப்பட்டது. அட்மா திட்டத்தின் வட்டார தொழில் நுட்ப மேலாளர் சந்திரசேகரன், தொழில் நுட்பத்திறன் வல்லுனர்கள், விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மாவு பூச்சி தாக்குதல் குறைவால் விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,00:57 IST

கோபிசெட்டிபாளையம்: மாவு பூச்சி தாக்குதல் குறைவால், கோபி சுற்று வட்டாரத்தில் மரவள்ளி கிழங்கு சாகுபடியில் விவசாயிகள் மீண்டும் ஆர்வம் காட்ட துவங்கி உள்ளனர்.
கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில் உள்ள, 24 ஆயிரம் ஏக்கர் மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகளிலும் வழக்கமாக நெல், கரும்பு, வாழை போன்ற பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படுகிறது.
விவசாய கூலி ஆள் பற்றாக்குறை, கூலி உயர்வால், விவசாயிகள் மல்பெரி, மரவள்ளி கிழங்கு என மாற்று பயிர்களுக்கு தாவினர். மாவு பூச்சி தாக்குதலால் மல்பெரி மற்றும் மரவள்ளி கிழங்கு பயிரிடுவதிலும் பிரச்னை ஏற்பட்டதால், மற்று விவசாயிமான எள், மக்காசோளம் பயிர்களுக்கு விவசாயிகள் மாறினர்.
கோபி, நாகதேவம்பாளையம், நாதிப்பாளையம், பொலகாளிப்பாளையம், நல்லகவுண்டன்பாளையம், கலிங்கியம், சின்னகுளம், கணபதிபாளையம் பகுதிகளில் எள், மக்காச்சோளம் ஆகியவை அதிகளவில் பயிரிடப்பட்டன. மாவு பூச்சி தாக்குதல் குறைய துவங்கியதால், மீண்டும் மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். சொட்டு நீர் பாசனத்துக்கு முழு மானியம் வழங்கப்படுவதால் சொட்டு நீர் பாசனம் மூலம் மரவள்ளி பயிரிட்டு வருகின்றனர்.
விவசாயிகள் கூறுகையில், ""சென்ற இரண்டாண்டுக்கு முன் மாவு பூச்சி தாக்குதலால், மரவள்ளி, மல்பெரி ஆகியவை அதிகளவில் பாதிக்கப்பட்டது. விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு, நஷ்டத்துக்கு தள்ளப்பட்டனர். கோபி சுற்று வட்டாரத்தில் மரவள்ளி பயிரிட்ட விவசாயிகள் அனைவரும் எள், மக்காச்சோளம் ஆகிய பயிருக்கு மாறினர். சென்ற ஆண்டில் மரவள்ளி உற்பத்தி குறைந்து காணப்பட்டது. நடப்பாண்டில் மாவு பூச்சி தாக்கும் சரியாகி விட்டதால், மரவள்ளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மரவள்ளி நடவு மற்றும் அறுவடை செய்யும் போது மட்டுமே விவசாய கூலி ஆட்கள் தேவைப்படுகிறது.
மற்ற நேரத்தில் விவசாயிகளே தோட்டத்தை பராமரித்து கொள்வர். நெல், வாழை உள்ளிட்டவைக்கு மாதந்தோறும் விவசாய கூலி ஆட்கள் தேவைப்படுகிறது.
தற்போது விவசாய கூலி ஆட்கள் பற்றாகுறை கடுமையாக உள்ளதாலும், மேலும், மஞ்சள்,கரும்பு போன்றவைக்கு கட்டுபடியாத விலையே கிடைக்கிறது.

இவ்வாறான பிரச்னையால் மரவள்ளி பயிருக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர்," என்றனர்.

## ஈரோட்டில் தென்னையில் மர்மநோய்: கிருமியை அழிக்க புழுக்கள் தயார்

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,00:57 IST

ஈரோடு: ஈரோடு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் தென்னை மரங்களில் மர்மநோய் தாக்கி வருவதால், விவசாயிகள் பீதியடைந்துள்ளனர். மர்ம நோயை ஏற்படுத்தும் கிருமியை அழிக்க, புழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலை, சித்தோடு, கவுந்தப்பாடி, பவானி உட்பட பல பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தென்னை மரங்களை வளர்த்து வருகின்றனர்.
இப்பகுதிகளில் இருந்து ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி, சேலம், கோவை உள்ளிட்ட பல மாவட்டங்களுக்கு இளநீர், தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.
கடந்த சில மாதங்களாக மர்ம நோய் தாக்குதலால், தென்னை மரங்கள் காய்க்காமல் போய்விடுகின்றன. மேலும் தென்னங்கீற்றுக்கள் வெள்ளையாகி, எதற்கும் பயனில்லாமல் போய் விடுகிறது. இதனால் தென்னை விவசாயிகள் பலர் பாதிப்படைந்துள்ளனர்.
இதுகுறித்து பவானி விவசாயி செந்தில் கூறியதாவது:
எங்கள் நிலத்தில் உள்ள 200க்கும் மேற்பட்டதென்னை மரங்களில் மர்ம நோய் தாக்கியுள்ளது. இந்நோய் தாக்குதலால், தென்னங்கீற்றுகள் முற்றிலும் வெள்ளை போன்ற ஒரு நிறத்தில், எதற்கும் பயனில்லாமல் போனது.
தென்னங்காய்கள் சிறியதாகி, இளநீர் பிடிக்காமல் உள்ளது. சங்ககிரி, சென்னிமலை, பள்ளிபாளையம் உள்ளிட்ட பகுதிகளிலும், வளர்க்கப்படும் தென்னையில் மர்மநோய் தாக்கி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.இதுகுறித்து வேளாண் அதிகாரிகளிடம் கேட்டபோது, தென்னையின் மர்ம நோயை ஒழித்து கட்ட, புழுக்கள் தயார் நிலையில் உள்ளதாக கூறினார். எங்கள் நிலத்தில் உள்ள பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள் மீது, ஏழு பாக்கெட் புழுக்கள் தெளிக்கப்பட்டுள்ளது. விரைவில் மர்ம நோயின் தாக்கம் குறையும் என்று வேளாண் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அந்தியூர் ஒழுங்குமுறை கூடம் ஜூன் 25ல் பருத்தி ஏல விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,00:57 IST

ஈரோடு: அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஜூன், 25ம் தேதி முதல் மாசிப்பட்ட பருத்தி ஏல விற்பனை துவங்கப்பட உள்ளது.
இந்த ஏல விற்பனையில், உள்ளூர் மற்றும் வெளி மாவட்ட மொத்த வியாபாரிகள், அறவை ஆலை

மற்றும் நூற்பாலை உரிமையாளர்கள் பங்கேற்று கொள்முதல் செய்ய உள்ளனர்.
விவசாயிகள், நன்கு முதிர்ந்து, மலர்ந்து வெடித்த பருத்தியினை அதிகாலை நேரத்தில் பறித்து, நிழலில் உலர்த்தி, தூசு மற்றும் சருகுகளை நீக்கி, ரகம் வாரியாக தனித்தனியே பறித்து விற்பனைக்கூடத்தில் நடக்கும் ஏல விற்பனைக்கு கொண்டு வர வேண்டும்.
இதன்மூலம் தங்களது விளைபொருளை சரியான எடை, போட்டி விலை, உடனடிப் பணத்துக்கு எவ்வித பிடித்தமும் இன்றி நல்ல விலைக்கு விற்று பயன்பெறுமாறு விற்பனைக்கு கண்காணிப்பாளர் சுப்புராமன் அழைப்பு விடுத்துள்ளார்.

**வாழைத்தாருக்கு திடீர் விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:17 IST

கரூர்: கரூரில் வாழைத்தாருக்கு திடீரென விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. வரும் ஆடி மாதத்தில் இருந்து திருவிழா மற்றும் சுப விசேஷங்கள் நடக்கவுள்ளதால், வாழைத்தாருக்கு மேலும் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், சேங்கல், காட்டுபுத்தூர், மாயனூர், நொய்யல், கிருஷ்ணராயபுரம், லாலாப்பேட்டை, குளித்தலை உள்ளிட்ட பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் வாழைத்தார் பயிரிடப்பட்டுள்ளது. கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கட ந்த மே மாதம் ஒரளவுக்கு ம ழை பெய்தது. இதனால் வாழைத்தார் உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. மேலும், வாழைத்தார்கள் எடை கூடுதலாகவும் இருந்தது.
பொதுவாக வரத்து அதிகரித்தால் விலை குறைய வாய்ப்புண்டு. ஆனால் வாழைத்தார் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், சுப விசேஷம் காரணமாக விலை சற்று அதிகரித்துள்ளது. கடந்த வாரம் 200 ரூபாய்க்கு விற்ற பூவன் வாழைத்தார் 300 ரூபாய்க்கும், ரஸ்தாளி 300 ரூபாயில் இருந்து 400 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி 250 ரூபாயில் இருந் து 300 ரூபாய்க்கும், பச்சைநாடா 200 ரூபாயில் இருந்து 300 ரூப ாய்க்கும் ஏலம் போனது. செவ்வாழை ஒரு பழம் 4 ரூபாயில் இ ருந்து ஆறு ரூபாய்க்கும் விற்றது.
இதுகுறித்து வாழைத்தார் வியாபாரிகள் கூறுகையில், ""நடப்பு மாதமான ஆனி மாதத்தில் திருமணம் உள்ளிட்ட சுபவிசேஷங்கள் அதிகளவில் நடக்கும். அடுத்து வரும் ஆடி மாதத்தில் சுப விசேஷங்கள் அதிகளவில் இல்லை என்றாலும், கிராமப்புறங்களில் அம்மன் கோவில்களில் திருவிழா களைகட்டும். இதனால் வரும் ஆடி மாதத்தில் சுப விசேஷங்கள் இல்லாத நிலையிலும், வாழைத்தாருக்கு நல்ல கிராக்கி இருக்கும். இதனால் வாழைத்தார் விலை மேலும் உயர வாய்ப்புண்டு," என்று கூறினர்.

## விவசாய கண்காட்சி விவசாயிகள் பங்கேற்பு

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:07 IST

லாலாப்பேட்டை: கோவையில் நடந்த நடந்த அக்ரி எக்ஸ்போ-2012 சிறப்பு கண்காட்சியில் கிருஷ்ணராயபுரம் வட்டார விவசாயிகள் பங்கேற்றனர்.
கொடிசியா வளாகத்தில் நடந்த கண்காட்சியில் புதிய விவசாய தொழில்நுட்பங்கள், செயல் விளக்கங்கள், புதிய வேளாண் கருவிகள், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு, நீர் நிர்வாகம், உர நிர்வாகம், விவசாய கடன் உதவிகள் பெற வழிமுறைகள் குறித்த தகவல்கள் இடம் பெற்றிருந்தது. கண்காட்சியில் கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தை சேர்ந்த பிள்ளப்பாளையம், லாலாப்பேட்டை, மகிளிப்பட்டி உள்ளிட்ட கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:07 IST

கரூர்: கடவூர் வட்டார அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் காரீப் பருவத்தில் சாகுபடி குறித்த தொழில் நுட்பங்கள், மானாவரி பயிர்களான சோளம், கம்பு, துவரை, எள் பயிர்கள் குறித்த விபரங்கள், சொட்டு நீர் பாசன மான்ய விபரங்கள், மொ பைல்ஃபோன் மூலம் மோட்டார் பம்பு இயக்கும் விதம் உள்ளிட்டவைகள் குறித்து தாந்தோணி வட்டார கால்நடை டாக்டர் மணி விளக்கம் அளித்தார்.

## விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:20 IST

பெரம்பலூர்: பெரம்பலூர் விதை பரிசோதனை நிலையத்தில் கோவை விதைச்சான்று இணை இயக்குநர் தங்கராஜூ நேரில் ஆய்வு செய்தார்.
பெரம்பலூரில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தை கோவை விதைச்சான்று இணை இயக்குநர் தங்கராஜூ நேரில் வந்து விதைகள் பௌதீக சுத்தம் செய்தல், முளைப்புத்திறன் பரிசோதனை செய்தல், ஈரப்பதம் பரிசோதனை செய்தல் போன்றவை குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து அறிவுரை வழங்கினார். ஆய்வின்போது பெரம்பலூர் விதை பரிசோதனை அலுவலர்கள் தெய்வீகன், சுந்தரராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

**உரங்களின் விலை உயர்வை ரத்து செய்ய விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,01:17 IST

தஞ்சாவூர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலாளர் துரைமாணிக்கம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பின் விபரம்:

உரங்களின் விலை உயர்வை மத்திய அரசு உடனடியாக ரத்து செய்ய வேண்டும். அண்மையில் மத்திய அரசு நெல் சாகுபடிக்கான உற்பத்தி செலவுகளை கணக்கில் கொள்ளாமல் ரசாயண உரங்களின் விலையை பல மடங்கு உயர்த்திதுயுள்ளது. இந்த விலை உயர்வு விவசாய உற்பத்தியில் கடுமையாக பாதிப்பை ஏற்படுத்தும், ஆகவே, உரங்களின் விலை உ யர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

காவிரி பிரச்னையில் நடுவர் நீதிமன்றத்தின் இடைக்கால தீர்ப்பு வழங்கி 21 ஆண்டுகளும், இறுதி தீர்ப்பும் வழங்கப்பட்ட ஐந்து ஆண்டுகளும் கடந்து விட்ட நிலையில் எந்தத் தீர்ப்பையும் கர்நாடக அரசு நிறைவேற்ற மறுத்து வறுகிறது. இவற்றை மத்திய அரசு வேடிக்கைப் பா ர்த்து கொண்டு பாராமுகமாக இருந்து வருகிறது.

மத்திய அரசின் இத்தகைய அக்கரையற்ற போக்கு கண்டித்தக்கது. ஆகவே, உடனடியாக ஊச்சநீதிமன்றத்தில் உள்ள மறுசீராய்வு மனுக்கள் மீது நிறைவான முடிவெடுத்து, தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும். இடைக்கால நடவடிக்கையாக நடுவர் மன்றத்தில் இடைக்கால தீர்ப்பின் படி தமிழ்நாட்டுக்கு கர்நாடகத்தில் இருந்து தண்ணீரை பெற்றுத்தர வேண்டும்.

உற்பத்தி செலவுகள் அதிகரித்திருப்பதை கணக்கில் கொள்ளாமல் அண்மையில் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூபாய் 170 உயர்த்தி அறிவித்திருப்பது ஏற்கத்தக்கதல்ல. அகவே, நெல்லுக்கு குவிண்டாலுக்கு ஒன்றுக்கு ரூ. இரண்டாயிரம் குறைபட்ச விலையாக அறிவிக்க வேண்டும். மாநில அரசு ஆதரவு விலையாக ரூ. 100 வழங்க வேண்டும்.தொழில்நுட்பக்குழு பரிந்துரைப்படி நெல் சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிபந்தனையின்றி அனைத்து விவசாயிகளுக்கும் தமிழ்நாடு அரசு கடன் வழங்க வேண்டும். இவற்றை நிறைவேற்ற முன்வரவில்லையென்றால் மத்திய, மாநில அரசுகளை எதிர்த்து விவசாயிகளின் போராட்டம் நடக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**கொட்டை முந்திரியை இருப்பு வைத்து விவசாயிகள் கடன் பெறலாம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 18,2012,00:46 IST

தேனி: விவசாயிகள் விளை பொருளான கொட்டை முந்திரியை, ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இருப்பு வைத்து, கடன் பெறலாம்.

ஆண்டிபட்டி,கடமலை மயிலை வட்டாரங்களில் தற்போது இலவம் பஞ்சு மற்றும் கொட்டை முந்திரி அறுவடை காலமாக உள்ளதால் வரத்து அதிகம் உள்ளது. அறுவடை செய்தவற்றை இருப்பு வைத்து, விலை கிடைக்கும் போது விற்பனை செய்து அதிக லாபம் பெறலாம். விரும்பும் விவசாயிகள் கொட்டை முந்திரியை தங்கம்மாள்புரம் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் இருப்பு வைக்கலாம்.

விளை பொருட்களின் மதிப்பில் 75 சதவீதம் தொகையும், அதிகபட்சமாக ரூ.2 லட்சம் வரை 5 சதவீத வட்டியில் தானிய ஈட்டுக்கடன் பெறலாம். அதிகபட்சமாக 120 நாட்களுக்கும், சிறப்பு அனுமதியின் பேரில் 180 நாட்களுக்கும் ஈட்டுக்கடன் சலுகை பெறலாம். கூடுதல் விவரங்களுக்கு சிட்டா, அடங்கல் மற்றும் இருப்பிட சான்றுடன், மார்க்கெட் கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், ஆண்டிபட்டி (இருப்பு), தங்கம்மாள்புரம். மார்க்கெட் கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைகூடம் தேனி ஆகியோரை தொடர்பு கொள்ளலாம், என தேனி விற்பனைகுழு செயலாளர் முருகன் தெரிவித்துள்ளார்.

**விவசாய மானியங்கள் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 17,2012,23:51 IST

வடமதுரை: வட்டார விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்படும் மானியங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் கூறியது: துவரை சாகுபடி அதிகரிக்கும் நோக்கில் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு (2.5 ஏக்கர்) ரூ. 15 ஆயிரம் மானியம் தரப்படும். அதோடு இவ்வாண்டு துவரையில் புதிய நடவு முறையாக, நெல் நாற்றுவிட்டு நடவு செய்வது போன்று புதிய ரகம் கொண்டு பாலித்தீன் பைகளில் நாற்று வளர்த்து அதனை எடுத்து நடவு செய்யும் முறை அறிமுகமாகியுள்ளது. இவ்வகை விவசாயிகளை ஊக்கப்படுத்த ஹெக்டேருக்கு ரூ.7, 500 மானியம் வழக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

* விதை கிராம திட்டத்தின் கீழ் இறவை, மானாவாரி நிலைகளுக்கு ஏற்ற உளுந்து சான்று விதை 50 சதவிகித மானியத்தில் வினியோகம் செய்யப்படும்.

* தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பருத்தி சாகுபடிக்கு 50 சதவிகித மானியத்தில் சான்று விதைகள், நுண்ணுரம், உயிர் காரணிகள் ஆகிய இடுபொருட்களும் வழங்கப்படும்.

---

தினகரன்

# உற்பத்தி குறைந்ததால் நாவல் பழத்திற்கு கிராக்கி கிலோ ரூ.240க்கு விற்பனை

பதிவு செய்த நேரம்:2012-06-18 10:31:36

நெல்லை: உற்பத்தி குறைந்ததால் மருத்துவ குணம் மிகுந்த நாவல் பழம் கிலோ ரூ.240க்கு விற்பனை செய்யப்படுகிறது.

பழங்களில் அதிக மருத்துவ குணம் மிகுந்தது நாவல்பழம். சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இது பரிந்துரை செய்யப்படுகிறது. புராண காலம் முதல் "சுட்டபழம்" என புகழ் பெற்ற நாவல் பழங்கள் ஜூன், ஜூலை மாதங்களில் அதிக அளவில் உற்பத்தியாகி விற்பனைக்கு வரும். தற்போது போதிய விளைச்சல் இல்லாததால் சீசன் தொடங்கியும் குறைந்த அளவிலான நாவல் பழங்களே உற்பத்தியாகி விற்பனைக்கு வரத்தொடங்கியுள்ளன.

பெங்களூருவில் இருந்து நெல்லை நாவல் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. முதல் ரக நாவல் பழம் கிலோ ரூ.240க்கும் அடுத்த ரகம் கிலோ ரூ.160க்கும் விற்கப்படுகிறது.

இது குறித்து பழ வியாபாரிகள் கூறுகையில், கடந்த ஆண்டு ரூ.200க்கு விற்கப்பட்ட முதல் ரக நாவல் பழம் தற்போது ரூ.40 வரை அதிகரித்துள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் உற்பத்தி குறைவால் இந்த விலையேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு நாவல் சீசன் நீண்ட நாட்கள் நீடிக்க வாய்ப்பு இல்லை என்றனர்.